**தலைப்பு 187 - முதலீட்டு மேம்பாட்டு அமைச்சு**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 187 - முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 மே 27 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக் கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதலீட்டு மேம்பாட்டு அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டு மொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

### 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியிருந்தன.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட் சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ஒரு மீண்டுவரும் செலவு விடயத்திற்கும் 03 மூலதன செலவு விடயங்களுக்கும் மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தமாக ரூபா 2,750,000 தொகையான நிதி ஏற்பாட்டில் எப்பணமும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் 187-2-4-5-1409 ஆம் இலக்க மீண்டுவரும் செலவு விடயத்திற்காக ஒதுக்கீடு செய்த ரூபா 50,000,000 தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 129,245 தொகை அதாவது 0.2 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் முடியுமான அளவிற்கு முழுமையாகவும் சரியாகவும் மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | பிரசைகளின் தகவல் தொழில்நுட்ப அறிவினை அதிகரிக்கும் குறிக்கோளில் 2021 ஆம் ஆண்டின் போது 02 தகவல் தொழில்நுட்ப பூங்காக்கள் யாழ்ப்பாணம், மன்னார் ஆகிய பிரதேசங்களில் வடக்கு, கிழக்கு அபிவிருத்தி புனர்வாழ்வு மற்றும் மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் காலத்துக்கு காலம் 11 | 2023 ஒக்தோபர் 25 ஆந் திகதி தகவல் தொழில்நுட்ப பூங்காவை தொழில்சார் பயிற்சி அதிகாரசபைக்கு ஒப்படைப்பது சம்பந்தமான கலந்துரையாடல் இராஜாங்க அமைச்சரின் தலைமைத்துவத்தில் தொழில்சார் பயிற்சி | தகவல் தொழில்நுட்ப பூங்காக்களின் செயற்பாடு சம்பந்தமாக அமைச்சு முழுமையான கண்காணிப்பினை மேற்கொள்ள வேண்டியதுடன் தேவையான செயற்பாடுகள் சம்பந்தமாக துரித |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சுக்களின் கீழ் பேணப்பட்டு வந்த இத்தொழில்நுட்ப பூங்காக்கள் 2022 யூலை 22 ஆந் திகதிய 2289/43 இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்காக நிர்ணயிக்கப்பட்ட ஆளணியினரை இனங்கண்டு முறையான அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாதிருந்தும் யாழ்ப்பாணம் தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்கான ஆளணியினராக 47 நபர்களும் மன்னார் தகவல் தொழில்நுட்ப பூங்காவிற்கு 12 நபர்களும் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும் நடைமுறை ஆண்டுவரை யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் தகவல் தொழில்நுட்ப பூங்காக்களுக்கான ஆளணியினர் முறையே 07 நபர்கள் மற்றும் 06 நபர்கள் வரை குறைவடைந்திருந்தனர். ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்காமையின் காரணமாக யாழ்ப்பாணம் தகவல் தொழில்நுட்ப பூங்காவில் நிவைறேற்று உத்தியோகத்தர் பதிவிக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் இரண்டாம் தரத்திலுள்ள ஒரு உத்தியோகத்தர் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தார். எவ்வாறாயினும் இப்பூங்காக்களில் காணப்பட்ட ஊழியர் வெற்றிடயங்கள், மாணவர்களைக் கவரும் நிகழ்ச்சிதிட்டங்கள் மற்றும் புதிய கற்கை நெறிகளை அறிமுக்கபடுத்துவது தொடர்பாக அமைச்சு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அதிகார சபையின் உப தலைவருடன் நடாத்தப்பட்டது. அதற்கிணங்க இத்தகவல் தொழில்நுட்பபூங்காவை தொழில்சார் பயிற்சி அதிகாரசபைக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதனால் யாழ்ப்பாணம் தகவல் தொழில்நுட்ப பூங்காவின் செயற்பாட்டுப் பொறுப்பு உத்தியோகத்தரின் வேண்டுதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்தல் தாமதமடைந்துள்ளது. | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது யாழ்ப்பாணம் தகவல் தொழில்நுட்ப பூங்காவின் கீழ் 11 சான்றிதழ் கற்கைநெறிகள் மற்றும் டிப்போமா கற்கை நெறிகளுக்கு 03 இணையவழி மற்றும் இணைய வலையமைப்பு தொடர்பான செயலமர்வுகளுக்கு 320 மாணவர்களைப் பதிவுசெய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்துடம் 02 கற்கை நெறிகளுக்கும் ஒரு செயலமர்விற்கும் | தகவல் தொழில்நுட்ப பூங்காக்களை வினைத்திறனாக செயற்படுத்துவதற்கு இயலுமை உள்ள தொழில்சார் பயிற்சி அதிகார சபை பேலான்ற நிறுவனத்திற்கு ஒபடபடைப்பதற்குத் தேவையான நடவடிக்கை | -மேற்படி- |

பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை 43 அதாவது 13 சதவீதமாகும். 2020 ஆம் ஆண்டிலிருந்து பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை 126 இலிருந்து 2023 ஆம் ஆண்டளவில் 43 வரை படிப்படியாக குறைவடைந்து காணப்பட்டது என மேலும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே மன்னார் தகவல் தொழில்நுட்ப பூங்காவின் கீழ் 10 கற்கைநெறிகளுக்காக எதிர்பார்த்த மாணவர்களின் எண்ணிக்கை 300 ஆக இருந்தும் 03 கற்கை நெறிகளுக்கு பதிவுசெய்திருந்த மாணவர்களின் எண்ணிக்கை 155 ஆகும். யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் பூங்காக்கள் இரண்டிலும் எதிர்பார்த்த கற்கைநெறி கட்டண வருமானம் முறையே ரூபா 1,129,000 மற்றும் ரூபா 2,185,000 ஆக இருந்த போதிலும் பதிவுசெய்த மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததன் காரணமாக அரசாங்க வருமானத்திற்குச் சேர்க்கக்கூடியதாக இருந்தது யாழ்ப்பாண பூங்காவிலிருந்து ரூபா 131,080 தொகையும் மன்னார் பூங்காவிலிருந்து ரூபா 833,500 தொகையுமாகும். இப்பூங்காக்களை பராமரித்தல் மற்றும் கற்கை நெறிகளை நடாத்துவதற்காக மீளாய்வாண்டின் போது யாழ்ப்பாணம் மற்றும் மன்னார் தகவல் தொழில்நுட்ப பூங்காகக்களுக்காக செலவு செய்யப்பட்ட கிரயம் முறையே ரூபா 6,330,201 மற்றும் ரூபா 4,999,863 ஆகும். இரண்டு பூங்காக்களின் 198 மாணவர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட வருமானத்தினைவிட ரூபா 10,365,484 தொகை மிகையாக செலவு செய்யப்பட்டிருந்தது.

எடுக்கப்பட்டு வருகின்றது எனவும் மாணவர்களின் தொடர்பு அதிக அளவில் காணப்படுவது உயர்வான ஏற்றுக்கொள்ளலினைக் கொண்ட நிறுவனத்திற்கேயாகும்.

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் காணி வேண்டுதல்களுக்கு நிகரான வகையில் கொழும்பு நகரத்தை விரிவுபடுத்துவதற்காக கொழும்பு துறைமுகத்திற்கு அருகாமையிலுள்ள காணியை நிரப்பும் ஒரு பிரேரணையாக கொழும்பு துறைமுக நகரத்தினை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கத்தின் கொள்கை மாற்றத்தின் கைவிடப்பட்டிருந்தது. அதன் காரணமாக செயற்திட்ட கம்பனியால் அமெரிக்க டொலர் 143 மில்லியன் இழப்பீட:டுப் பணம் வேண்டப்பட்டிருந்ததுடன் அதற்குப பதிலாக 02 ஹெக்டயர் பரப்பளவு உள்ள ஒரு வணிக ரீதியான காணி செயற்திட்ட கம்பனிக்கு வழங்கப்பட்டிருந்தது. இக்காணியின் மதிப்பீட்டுப் பெறுமதி அறிக்கையிடப்பட்டிருக்காததுடன் இழப்பீட்டுப் பணம் அல்லது காணியின் பெறுமதியால் அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது. | இதற்கு PMO/06/03/CM/70/2016 ஆம் இலக்க 2016 யூலை 14 ஆந் திகதிய அமைச்சரவை விஞ்ஞாபனம் காரணமாக இருந்தது. | இலங்கை அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | துறைமுக நகரத்தின் கழிவு நீரினை முகாமைத்துவம் செய்வதற்காக ஒரு நிரந்தர தீர்வினை வழங்கும் வரை ஒரு தற்காலிகத் தீர்விற்காக எதிர்பார்த்த செலவு ரூபா 1,000 மில்லியனாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தும் திட்டத்தினை மாற்றம் செய்தல் மற்றும் விலைகள் அதிகரித்துச் செல்லலின் காரணமாக மதிப்பீடு செய்யப்பட்ட செலவு ரூபா 3,700 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. இச்செயற்பாடானது கொழும்பு துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்திற்கான முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் 2019 ஆம் ஆண்டின் போது முடிவடைந்திருக்க வேண்டிய | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் தொற்று நோய் மற்றும் உலகளாவிய பொருளாதார சிக்கலினை முன்னிட்டு இச்செயற்திட்டத்தினை ஆரம்பிப்பதற்கு அல்லது அதற்காக பணத்தை ஒதுக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. அதன் நடவடிக்கைகள் 2022 திசெம்பர் மாத்தின் போது ஆரம்பமானது. திட்டத்தில் மாற்றங்கள் மற்றும் விலைகள் அதிகரித்துச் செல்லலின் அடிப்படையில் | ரூபா 1,000 மில்லியனின் கீழ் தற்காலிக திர்வினை 2019 ஆம் ஆண்டின் போது பூர்த்திசெய்வதற்கு 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் காணப்பட்ட கொவிட் தொற்றுநோய் மற்றும் உலகளாவிய பொருளாதார சிக்கல் தாக்கம் ஏற்படுத்தயிருக்கவில்லை. முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் 2022 திசெம்பர் மாதத்திலேயே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. 2017 - 2019 காலப்பகுதியின் போது ரூபா 1,600 மில்லியன் பணம் பொதுத் திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்தும் 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை செயற்திட்டம் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 2,900 மில்லியன் மொத்த கிரயத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த நிரந்தர தீர்வுச் செயற்பாடும் 2022 ஆம் ஆண்டின் போது பூரணப்படுத்தப்பட வேண்டிய போதிலும் 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதி வரை இச்செயற்திட்டத்தின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2022 ஆம் ஆண்டளவில் தற்காலிக மற்றும் நிரந்தர தீர்வுகள் இரண்டும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததனால் நிரந்தர தீர்வுகளை அமுல்ப்படுத்துவதற்கு அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருக்காததனால் தற்காலிகத் தீர்விற்குச் செலவு செய்யப்பட்ட ரூபா 3,700 மில்லியன் அரசாங்கத்திற்கு ஏற்பட்ட ஒரு நட்டம் என அவதானிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் கிரய மதிப்பீடு ரூபா 1,000 மில்லியனிலிருந்து ரூபா 3,700 மில்லியன் வரை அதிகரித்திருந்தது. தற்காலிகத் தீர்வாக கொழும்பு நகர சபையின் தெற்கு பிரதேசத்தில் தற்பொழுது காணப்படுகின்ற கழிவு நீர் வழிகளுக்கு தொடர்புபடுத்துகின்ற பம்பிகள் மற்றும் குழாய்களை திருத்தம் செய்வதன் மூலம் துறைமுக நகரத்தின் கழிவுநீர் வசதிகளின் தேவைப்பாட்டில் ஒரு நாளுக்கு 5000 கன மீற்றர் அளவினை நிறைவேற்றக்கூடியதாக இருந்ததனால் தெற்கு கழிவு நீர் இணைப்பினை முறைமைப்படுத்திய அதேவேளை வடக்கு கழிவு நீர் இணைப்பு செயற்திட்டத்தினை அமுல்படுத்துவதற்கான தீர்மானமாகும். அவ்வாறே வடக்கு கழிவு நீர் இணைப்பினை 03 ஆண்டுகள் காலத்திற்குள் பூர்த்திசெய்வதனை தீர்மானிப்பதற்கும் இது காரணமாக இருந்தது. | |
| (இ) | முத்தரப்பு உடன்படிக்கையின் 24.1.2 ஆம் பந்தியின் பிரகாரம் 91 ஹெக்டயர் அளவான பொதுக் காணியினுள் உள்ள துறைமுக நகரத்தின் கடற்கரை பிரதேசம் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமானதாக இருக்கவேண்டிய போதிலும் செயற்திட்ட கம்பனியால் கடற்கரை பிரதேசத்தைச் சார்ந்த காணி சில உணவுச் சாலைகளுக்கு தற்காலிகமாக வாடகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்து அந்த உணவுச் சாலைகளிலிருந்து வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. | பல்வேறு செயற்திட்ட நடவடிக்கைகளை முன்னிட்டு காணித் துண்டுகளை ஒதுக்கீடு செய்தல் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவிற்குரிய செயற்பாடு அல்லாததுடன் அது கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுவிற்குரிய செயற்பாடாகும். கொழும்பு துறைமுக நகரம், விசேட பொருளாதார வலயத்தை நிர்மாணிக்கும் ஒரு நிலமாகக் | முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்படுவதுடன் அனைத்து பராமரிப்பு மற்றும் உரிய செயற்பாடுகளும் கொழும்பு துறைமுக நகர அபிவிருத்தி செயற்திட்ட கம்பனியின் மூலம் மேற்கொள்ளப்படுவதுடன் அது சம்பந்தமான எந்தக் கிரயமும் மேற்கொள்ளப்படுவதில்லை. எனவே இச்செயற்பாடுகளிலிருந்து கிடைக்கும் வருமானம் செயற்திட்ட கம்பனியால் சேகரிக்கப்படுகின்றது. | |
| (ஈ) | முத்தரப்பு உடன்படிக்கையின் பட்டோலை இலக்கம் 10 இன் பிரகாரம் வணிகரீதியான காணி பொதுக் காணி மற்றும் வீதிகளுக்கான காணி, உள்ளடங்கலாக 118 காணிப் பகுதிகளின் வேலைத்தளத்தை மேம்படுத்துதலானது 2019 செப்தெம்பர் 16 ஆந் திகதியளவில் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் 85 காணிப் பகுதிகளை மாத்திரம் முடிவுறுத்தும் சான்றிதழ் வழங்கப்பட்டிருந்தது. மேலும் வீதிகள் பாலங்கள், சுரங்கப் பாதைகள் என்பன 2020 மார்ச் 14 ஆந் திகதியளவில் முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் 2023 செப்தெம்பர் 30 ஆந் திகதியளவில் 50 சதவீத்திற்கு மேற்பட்டவை பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் நிர்மாண வேலைகள் பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. 2020 மார்ச் 09 ஆந் திகதி முடிவுறுத்தப்பட வேண்டிய காணியை அழகுபடுத:தும் நடவடிக்கைகளும் 2023 நவம்பர் 30 அந் திகதி வரை 77 சதவீதம் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 07 கட்டங்களில் முடிவுறுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த தெற்கு கழிவு நீர் வழியினைப் பூர்த்திசெய்தல் 2023 யூலை 11 ஆந் திகதி மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் 2023 செப்தெம்பர் 30 ஆந் | கம்பனியால் முறையான ஆவணங்களைச் சமர்ப்பித்ததன் பின்னர் செயற்திட்ட முகாமைத்துவ பிரிவு மற்றும் அமைச்சு ஆகிய இரண்டு நிறுவனங்களும் மிகுதியான காணித் துண்டுகளுக்காக பூர்த்திசெய்தல் சான்றிதழினை வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்துள்ளது எனவும் செயற்திட்ட கால அட்டவணைக்கு இணங்க கொவிட் 19 தொற்று நோய் மற்றும் பொருளாதார சவால்கள் போன்ற வெளிக் காரணிகளின் தாக்கம் ஏற்பட்டுள்ள அம்சங்களையும் உள்ளடக்கும் வகையில் 08 ஆண்டுகளுக்குள் செயற்திட்டத்தின் வேலைகளை முடிவுறுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | திகதி வரை அதில் மூன்று கட்டங்கள் திட்டமிடல் கட்டத்தில் காணப்பட்டது. | | |
| (உ) | முத்தரப்பு உடன்படிக்கையின் பிரகாரம் பொதுக்காணிகள், விற்பனை செய்யக்கூடிய காணிகள் (GOSL) மற்றும் விற்பனை செய்யக்கூடிய காணிகளுக்காக (செயற்திட்ட கம்பனி) ஒதுக்கீடு செய்யப்பட வேண்டிய காணியின் அளவு முறையே 91, 62 மற்றும் 116 ஹெக்டயர்களாக இருந்ததுடன் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள காணியின் அளவு 93.65, 60.85 மற்றும் 118.16 ஹெக்டயர்களாக இருந்ததனால் மிகையாக ஒதுக்கீடு செய்யப்பட்ட காணியின் அளவு 3.66 ஹெக்டயர்களாகும். | பட்டோலை 14 இன் 10 மற்றும் 11 ஆம் பந்திகளில் காட்டப்படுவதாவது மேலதிக காணிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நடைமுறையாகும். பட்டோலை 14 இன் முதலாவது பந்தியில் காட்டப்படுகின்ற காணிகளை பெற்றுக்கொள்ளும் நடைமுறையில் மேலதிக காணியானது இலங்கை அரசாங்கத்திற்கும் செயற்திட்ட கம்பனிக்குமிடையே நியாயமாக பகிர்வதற்காக சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது. | -மேற்படி- |
| (ஊ) | டெக்னோ பார்க் டிவலொப்மன்ட் பிரைவேட் லிமிடட் கம்பனி 2021 செப்தெம்பர் 29 ஆந் திகதி அரசாங்கத்தின் முழுப் பங்களுக்கும் உரிமையுள்ள ஒரு கம்பனியாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தது.<br>இக்கம்பனியானது 2289/43 ஆம் இலக்க 2022 யூலை 14 ஆந் திகதிய அதிவிசேட வர்த்தமானியின் மூலம் முதலீட்டு மேம்பாட்டு அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் ஒரு பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டிருந்தும் அதன் அங்கத்தவர்கள் அடிக்கடி இராஜினாமாச் செய்ததன் காரணமாக செயற்படும் மட்டத்தில் காணப்படவில்லை. அமைப்பு அகவிதியின் 43(i), (iii) மற்றும் (iv) மற்றும் 43(2) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை. மேலும் அமைப்பு அகவிதியின் 43(5) ஆம் பிரிவின் பிரகாரம் ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | டெக்னோ பார்க் டிவலொப்மன்ட் தனியார் கம்பனிக்கு ஒரு தலைவர் மற்றும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களை நியமிக்குமாறு இந்த அமைச்சினால் சனாதிபதியின் செயலாளரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. தற்பொழுது பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கம்பனியின் பணிப்பாளர் சபை நீக்கப்பட்டதனால் ஒரு கம்பனியாக செயற்படவில்லை என்பதனால் ஆண்டறிக்கையினை தயாரிக்க முடியாதுள்ளது. | 01/2021 ஆம் இலக்க 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.6 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியதுடன் அமைப்பு அகவிதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (எ) | காலி மற்றும் குருனாகல் தொழில்நுட்ப பூங்காக்களுக்காக 31 ஏக்கர் 02 ரூட் 23 பேச்சர்ஸ் காணியும் 50 எக்கர் காணியையும் பெற்றுக்கொள்ளுமாறு 2021 ஏப்ரல் 08 மற்றும் 2021 யூன் 17 ஆந் திகதிய சனாதிபதி செயலாளரின் கடித்தின் மூலம் தெரிவிக்கப்பட்டிருந்தும் அவற்றில் காலிக்காக 29 ஏக்கர் 03 ரூட் 7.15 பேச்சர்ஸ் மற்றும் குருனாகலுக்காக 20 ஏக்கர்கள் மாத்திரம் பெற்றுக்கொள்ளப்பட்டன. மேலும் குருனாகல் காணியில் அமைந்திருந்த இரண்டு வீடுகளுக்காக மாற்றுக் காணிகளை வழங்கும் நடைமுறை சம்பந்தமாக அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை ல. | 2021 ஏப்ரல் 08 ஆந் திகதிய சனாதிபதி செயலகத்தின் கடித்தில் 31 ஏக்கர் 02 ரூட் 23 பேச்சர்ஸ்களை பெற்றுக்கொள்ளுமாறு தெரியப்படுத்தியிருந்தும் அக்மீமன பிரதேச செயலகத்தினால் வழங்கப்பட்ட உரிமையை ஒப்படைக்கும் சான்றிதழின் பிரகாரம் 29 ஏக்கர் 03 ரூட் 7.15 பேச்சர்ஸ் மாத்திரம் தொழில்நுட்ப அமைச்சிற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. காணிகளை சுவீகரிக்கும் நடைமுறை தொடர்பான புதிய தகவல்கள் மற்றும் இரண்டு வீடுகளை நிர்மாணிப்பதற்கான மாற்று காணிகளை வழங்கும் தகவல்கள் இச்சந்தர்ப்பத்தில் அமைச்சிடம் இல்லாததுடன் குருனாகல் பிரதேச செயலகத்திடம் தகவல்களைத் தேடிப்பார்க்குமாறு அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. | உரிய வித்தியாசங்களுக்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்தல் வேண்டும். |
| (ஏ) | காலி தொழில்நுட்ப பூங்காவின் பொறியியல் ஆலோசகருக்கு 2022 ஏப்ரல் மாத்திலிருந்து ரூபா 18,173,751 தொகை குருனாகல் பூங்காவின் பொறியியல் அலோசகருக்கு 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 36,188,088 தொகை மற்றும் காலி பூங்காவின் நிர்மாண ஒப்பந்தக்காரருக்கு 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 950,601,926 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மத்திய பொறியியல் ஆலோசனை பணியகத்திடமிருந்து விலைப்பட்டியல்கள் கிடைத்துள்ளது. மற்றும் 2022 ஆம் ஆண்டில் கம்பனியின் பணிப்பாளர் சபை இராஜினாமாச் செய்ததோடு கம்பனியின் செயற்பாடு நிறுத்தப்பட்டது இதற்குக் காரணமாக இருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | காலி மற்றும் குருனாகல் தொழில்நுட்ப பூங்காக்கள் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டு 02 ஆண்டுகள் கடந்திருந்தும் பௌதீக பரீட்சிப்பு மேற்கொண்ட 2024 | செயற்திட்டம் 2022 ஏப்ரல் வரை மாத்திரம் செயற்பட்டிருந்தது. அரசாங்க செலவுகளை கட்டுப்படுத்துவது | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பெப்ரவரி 05 ஆந் திகதி வரை நிர்மாண நடவடிக்கை நிறுத்தப்பட்டிருந்தது.இத்தாமதத்தின் காரணமாக காலி மற்றும் குருனாகல் தொழில்நுட்ப பூங்கா ஒப்பந்த உடன்படிக்கைகளின் 14.6 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்தம் தாமதித்தமையின் அடிப்படையில் முறையே ரூபா 236,355,010 மற்றும் ரூபா 416,802,172 தொகை தாமதக் கொடுப்பனவாக டெக்னோ பார்க் டிவலப்மன்ட் பிரைவேட் லிமிடட் கம்பனியால் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டியிருந்தது. அதற்கிணங்க அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் ரூபா 653,157,182 ஆகும். | தொடர்பான நிதி அமைச்சின் 03/2022 ஆம் இலக்க 2022 மார்ச் 26 ஆந் திகதிய பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் நிதி இல்லாமையின் காரணமாக நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டன. மேலும் டெனோ பார்க் டிவலொப்மன்ட் பிரைவேட் லிமிடட் கம்பனியின் பணிப்பாளர் சபை 2022 ஆகஸ்ட் 25 ஆந் திகதி இராஜினாமாச் செய்தது. அதற்கிணங்க செயற்திட்டத்தின் எந்த நடவடிக்கையும் இடம்பெற்றிருக்கவில்லை. செயற்திட்ட கம்பனியால் முதலீட:டு மேம்பாட்டு அமைச்சிடமிருந்து தாமதித்தமைக்காக நியாயத்தை வேண்டியுள்ளது. | |
| (ஒ) | நுவரெலியா மற்றும் கண்டி உத்தேச தொழில்நுட்ப பூங்காக்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகளுக்காகத் தெரிவுசெய்யப்பட்ட கம்னி 2021 நவம்பர் 16 மற்றும் 2022 பெப்ரவரி 24 ஆந் திகதிகளில் செயற்திட்ட பிரேரணையை சமர்ப்பித்திருந்தும் அதன் நிர்மாண நடவடிக்கைகளானது அறிக்கையிடும் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | செயற்திட்ட அறிக்கையின் கால அட்டவணைக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| அமைச்சிற்கு ஏனைய அரசாங்க நிறுவனங்களிடமிருந்து கிடைத்த 16 வாகனங்களை பொறுப்பேற்காதும் பதிவுசெய்தல் உரிமை இல்லாதும் 2023 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்படுத்தி | கௌரவ இராஜாங்க அமைச்சருக்கு பயன்படுத்துவதற்குப் பொருத்தமான ஒரு வாகனம் அமைச்சிடம் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வந்திருந்தது. அதற்கிணங்க கொம்ட்ரோலர் நாயகத்தினால் வழங்கிய 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கைக்கு முரணாக சொத்துக்கள் பொறுப்பில் வைக்கப்பட்டிருந்தது.

இல்லாதிரந்ததன் அடிப்படையில் அவற்றில் ஒரு வாகனம் மத்திய மாகாணத்தின் பிரதம செயலாளரினால் கௌரவ இராஜாங்க அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது எனவும் அமைச்சினால் பயன்படுத்துகின்ற வாகனங்களை முறைப்படியாக அமைச்சினால் பொறுப்பேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.